வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,065,12,54,000/-, மூலதனக் கணக்கில் ரூ.350,00,06,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.125,00,02,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

7. உரிமை மீறல் பிரச்சினை

வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் 25-8-2015 அன்று அவையில் பேசாதவற்றைப் பேசியதாக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 25-8-2015 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, அவையில் பேசாத கருத்தினை, பேரவையில் பேசியதாக சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளதாக 30-8-2015 அன்று முரசொலி நாளிதழிலும், மாலை முரசு பத்திரிகையிலும் செய்தி வந்ததாக, இன்று அவை உரிமை மீறல் அறிவிப்பு கொடுத்துள்ளார். இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன்கீழ் இப்பிரச்சினைக் குறித்து ஆய்ந்து அறிக்கை அளிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.